செய்தி வெளியீடு எண்: 332 நாள் : 09.07.2015

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B.V. ரமணா அவர்கள் இன்று 9.7.2015 நந்தனம் கூட்டாண்மை அலுவலகத்தில் தமிழகத்தில் ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை குறித்து ஆய்வுக்கூட்டத்தை நடத்தினார். இந்த கூட்டத்திற்கு பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு செயல்படுத்தப்பட்ட பல்வேறு பால்வளத்திட்டங்களின் மூலம் தமிழகத்தில் 2–ம் வெண்மைப்புரட்சி ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக ஆவின் பால்கொள்முதல் நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டராகவும் மற்றும் சென்னை மாநகர விற்பனை நாளொன்றுக்கு 11.70 இலட்சம் லிட்டராகவும் உயர்ந்து பால்கொள்முதல் மற்றும் பால் விற்பனையில் வரலாற்று சாதனை புரிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகர பால் விற்பனையை மேலும் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர் என்ற அளவில் உயர்த்துவதற்கான பல்வேறு வியாபார யுக்திகளை ஆவின் நிறுவனம் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. சென்னையில் பால் விற்பனையை வரும் மார்ச் 2016–க்குள் நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டராக அதிகரிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் விதமாக, விமானம் மற்றும் இரயில் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏதுவாக சிறிய அளவிலான பாக்கெட்டுகளில் ஆவின் பால் உபபொருட்களை தயாரித்து வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

நுகர்வோர் பயன்பாட்டிற்காக அண்ணாநகர் ஆவின் டவர் நவீன பாலகத்தில் இலவச வைபை (wi-fi) வசதி செய்து தர முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த வசதி ஆவின் திறக்க திட்டமிட்டுள்ள விருகம்பாக்கம், பெசன்ட் நகர் போன்ற நவீன பாலகங்களில் செய்து தரப்படும்.

நுகர்வோர் நலனைக்கருத்தில் கொண்டு ஆவின் மாதாந்திர பால் அட்டைகள் விண்ணப்பித்த உடன் வழங்குவதற்கும், மாதம் முழுவதும் புதிய மாதாந்திர பால்

அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் நுகர்வோர்கள் வசதிக்காக அவர்களின் இருப்பிடங்களில் ஆவின் மாதந்திர பால் அட்டைகள் அந்த அந்த குடியிருப்போர் நலச் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்த விபரங்கள் அறிய வடசென்னை பகுதி நுகர்வோர்கள் **9444939594**, மத்திய சென்னை பகுதி நுகர்வோர்கள் **9444452223** மற்றும் தென்சென்னை பகுதி நுகர்வோர்கள் **9884722934** என்ற கைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். நுகர்வோர்களுக்கு பால்பொருட்களான வெண்ணெய், நெய், தயிர், மோர், ஐஸ்கிரீம், மைசூர்பா, கோவா, குலோப்ஜாமுன் போன்ற ஆவின் பால்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சமையல் கலைஞர்கள், உணவக உரிமையாளர்கள் ஆகியோர்களுக்கு சிறப்பு சலுகை விலையில் பால் மற்றும் பால்பொருட்கள் வழங்கப்படுகிறது. சமையல் கலைஞர்கள், உணவக உரிமையாளர்களுக்கு சேவை அளிக்க தனியாக ஒரு சேவை மையம் நந்தனம் அலுவலகத்தில் **9445530503** என்ற தொலைபேசி எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே, சமையல் கலைஞர்கள், உணவக உரிமையாளர்கள் மேற்கண்ட எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்தால் அவர்களுக்கு தேவையான பால் மற்றும் பால்பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

நுகர்வோர்கள் தங்கள் புகார் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க 24 மணி நேர நுகர்வோர் நலன் மற்றும் சேவை பிரிவை 1800–425–3300 (இலவச சேவை) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி, இ.ஆ.ப., மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**